# சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் அபிவிருத்தி வசதி செயற்திட்டம் 2010

## 1. அபிப்பிராயம்

எனது பரிசீலனையிலிருந்து தென்படுவதும் சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இவ்வறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழும் சீராக்கல்களின் விளைவுகளைத் தவிர,

(அ) 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைச் செயற்திட்டம் பேணியுள்ளதெனவும் நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கமைய, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையினை விளக்குகின்றன என்பதும்

(ஆ) எதன் பொருட்டு நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டது என்பதும்

(இ) கடனுதவி உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட நிதியளிப்புக் கட்டுப்பாடு உடன்பாடு ஏற்பட்டுள்ளது என்பதும்

எனது அபிப்பிராயமாகும்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயற்பாடு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற எட்டு மாதத்திற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 5,179,191 ஆகும். எட்டு மாத காலப்பகுதிக்கான செலவினப் பொழிப்பைப் பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற 8 மாதகாலப்பகுதிக்கான செலவினம் |
|---|---|
| | ரூபா |
| மூலதனச் செலவினம் | |
| மீளச் செலுத்தக்கூடிய வைப்பு-நீர் பாவனையாளர்கள் | 37,400 |
| செயற்பாட்டுச் செலவினம் | |
| ஆளணி வேதனம் | 3,949,823 |
| ஆலோசனைக் கட்டணம் | 432,151 |
| அலுவலகச் செலவினம் | 178,730 |
| மோட்டார் வாகனப் பராமரிப்பு | 362,764 |
| காகிதாதிகள் | 69,857 |
| போக்குவரத்தும் பிரயாணமும் | 44,887 |
| தொடர்பாடல் | 103,579 |
| மொத்தம் | 5,179,191 |

## 3. கணக்காய்வு அவதானிப்புரைகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1 கணக்குகளில் குறைத்துக்காட்டுதல்கள்

அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் தலைப்பு இல. 243 இன் கீழ் 2010 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக்கணக்கின் பிரகாரம் செயற்திட்டத்தின் உள்ளவாறான செலவினம் ரூபா 5,392,136 ஆக இருந்த போதிலும் செயற்திட்டத்தினால் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 08 மாதங்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அச்செலவினம் ரூபா 5,179,191 ஆக இருந்தமையால் ரூபா 212,945 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

## 3.2 பேரேடுகளைப் பராமரித்தல்

மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பேரேடுகள் பராமரிக்கப்பட்டிராததுடன் ஒரு பரீட்சை மீதியும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்வற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| | 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | |
| (i) | பந்தி 2.2.1 | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்திற்காக ஒரு முழுநேர நிதி முகாமையாளர் நியமிக்கப்பட வேண்டும். இருந்த போதிலும் பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய மன்றத்தின் கணக்காளர் மேலதிக கடமையின் அடிப்படையில் நிதி முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்தார் |
| (ii) | பந்தி 2.2.9 | செயற்திட்டப் பதவியணியினரின் கல்விசார், தொழில்சார் தகைமைகள் அனுபவம், திறன் என்பவற்றை உறுதிசெய்யும் விதத்தில் நாளதுவரையாக்கப்பட்ட பெயர்வழிக் கோவைகள் பேணப்படாதிருந்ததுடன் தற்போது பெயர்வழிக்கோவைகளில் |

| | | |
|---|---|---|
| | | உள்ள சான்றிதழ் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பந்தி 4.1.3 | தற்போதைய கடமைக்கு மேலதிகமான கடமையின் அடிப்படையில் செயற்திட்டத்திற்காக நியமிக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களுக்காக சம்பளம் செலுத்தும் போது செயற்திட்டத்தில் அப்பதவிகளுக்குரிய முழுச் சம்பளமும் செலுத்தப்பட்டிருந்தன. மேலும் சம்பளத்திற்கு மேலதிகமாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றிற்கான பங்களிப்புக்களும் செலுத்தப் பட்டிருந்தன. இதன் பிரகாரம் யூன் தொடக்கம் திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் ரூபா 1,314,470 தொகையான மிகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 4. செயற்திறன்

### 4.1 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடுகள்

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதிலுள்ள தாமதத்தினால் 2010 ஆம் அண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் பின்வரும் நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

(அ) ரூபா 10,000,000 தொகையான தேறிய உள்நாட்டு நிதி ஏற்பாட்டில் ரூபா 5,179,191 செலவிடப்பட்டிருந்ததுடன் நிதி ஏற்பாட்டில் ரூபா 4,820,809 தொகை அல்லது 48 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 99,750,000 தொகையான தேறிய வெளிநாட்டு நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதியில் ரூபா 19,300,000 பெறுமதியான பத்து விடயங்களை மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்குகளின் சமர்ப்பித்தல்

4804- எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II பீ ஆம் பிரிவின் பிரகாரம் திட்ட அமுலாக்கல் பிரிவு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை நிதியாண்டு முடிவடைந்து 06 மாதங்களுக்குள் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்குச் (ஐடிஏ) சமர்ப்பிக்க வேண்டும். இருந்த போதிலும் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 08 மாதத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 23 ஆந் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2011 ஆகஸ்ட் 08 தொடக்கம் 17 வரையான தூதுக்குழுவின் அறிக்கையின் 43 ஆம் பிரிவின் பிரகாரம் 2010 இன் நிதியாண்டிற்கான வெளிநாட்டு நிதியளிப்பில் செயற்திட்ட செலவினம் எதுவும் காணப்படாமையினால் முதலாவது கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை 30 யூன் 2012 வரையில் சமர்ப்பிப்பதற்கு உடன்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

1. பேரேட்டுக் கணக்குகளைப் பேணுதல்
2. மோட்டார் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் சம்பவத் திரட்டுப்புத்தகங்கள் என்பனவற்றைப் பேணுதல்
3. பெயர்வழிக் கோவைகள்